REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 2உ புதன் (17—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 3உ வியாழன் (18—11—54) [இதழ் 134

## பலியானவர் எண்ணிக்கை அதிகரிக்கிறது!

திருவனந்தபுரம், நவ. 16—

சென்ற ஆகஸ்ட் 16-ந் தேதி நடைபெற்ற திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின்போது நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் 7 பேர் மாண்டனர் என்றும், 8 பேர் காயமுற்றனர் என்றும் திருவனந்தபுரம் மாவட்ட போலீஸ் சூப்பரிண்டெண்டு, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரிக்கப்பட்டபோது தமது வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார். (முதலில், 4 பேர் மாண்டதாகவும், காயம் பட்டவர் ஒருவர்தானென்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது நினைவிலிருக்கலாம்.)

# நாள் ஒன்றுக்கு லட்ச ரூபாய் ராணுவச் செலவு

## செலவை ஈடு செய்ய கிராமங்களுக்கு தண்ட வரி

### இந்துக் கோவில்கள் மீது வரி விதிக்க முயற்சி

### கோவா சர்க்கார் ஆதிக்க வெறியின் விளைவு

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள பிரெஞ்சுத் திட்டுகளை விட்டு பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வெளியேறினதைக் கண்ட பின்னரும், போர்ச்சுகல் ஏகாதிபத்தியத்திற்கு, கோவாவை விட்டு வெளியேற வேண்டும் என்ற நல்லறிவு பிறக்கக் காணோம். கோவா, டையூ, தாமன் என்ற மூன்று திட்டுகளும் போர்ச்சுகல் தாய்நாட்டுடன் ஒன்றியுள்ளவைகளாகும் என விதண்டாவாதம் புரிந்து வருகிறது, மேற்படி ஏகாதிபத்தியம்!

அதற்காக, ஏராளமான போர்ச்சுகல்—ஆப்பிரிக்க துருப்புகளைக் கொண்டுவந்து, கோவாவில் குவித்து வைத்திருக்கிறது, போர்ச்சுகல்! அந்த இராணுவத்திற்கு நாள் ஒன்றுக்கு லட்ச ரூபாய்க்குமேல் செலவு செய்தும் வருகிறது, ஏகாதிபத்தியம்!

இந்தப் பெருஞ் செலவு, அதன் சக்திக்கு மீறின ஒன்று; எனவே, மேற்படி செலவை ஈடு செய்ய கோவா கிராம மக்கள் மீது இராணுவத் தண்ட வரி போட முனைந்திருக்கிறது. கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வகுப்பினரும், கூட்டாக ரூ. 10,000 தர வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்துக் கோயில்களிடத்திலும் இராணுவச் செலவுக்காக வரி வசூலிக்கும் நினைப்பு கோவா சர்க்காருக்கு இருந்து வருகிறதாக கோவா தேசியக் காங்கிரஸ் அறிவிக்கிறது.

மேலும் இரண்டு திங்கள் வரை இராணுவத் துறையில் இப்படியே செலவிட்டுவர கோவா சர்க்கார் முனையுமானால், தங்கள் ஊதியத்துக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என சர்க்கார் அதிகாரிகளிடை அச்சம் பிறந்திருக்கிறதாம்! இந்த நெருக்கடி நிலையை, பொருள் துறைத் தலைவர், கோவா கவர்னர்-ஜெனரலுக்கு திட்டவட்டமாக அறிவித்து இருப்பதுடன், தம்மை வேறு இடத்திற்கு மாற்றிவிடும்படியும் கோரியுள்ளாராம்!

காலியாகிக் கிடக்கும் பணப் பெட்டியிலிருந்து, எதை எடுத்து சர்க்கார் அதிகாரிகளுக்கு ஊதியமாகத் தருவது என்பதே அவருக்கிருக்கிற பெருங் கவலை எனத் தெரிய வருகிறது!

## தடுப்புக் காவல் சட்டம் நீடிக்கப்படும்?

### மேலும் மூன்றாண்டுக்கு உயிர்ப் பிச்சை

தங்களுக்கு விருப்பமில்லாத அரசியல் கட்சியினரை, சட்டப்படி வழக்குத் தொடர்ந்து விசாரிக்காமல், நீண்டகாலத்திற்குச் சிறையில் பூட்டிவைக்க, காங்கிரஸ் ஆட்சியாளருக்குப் பேருதவியாக இருந்துவருவது தடுப்புக் காவல் சட்டமாகும். அந்தச் சட்டம் வருகிற டிசம்பர் மாதத்தோடு செத்துமடிகிறது. அதற்கு மேலும் மூன்று ஆண்டுகாலத்திற்கு உயிர் கொடுக்க இந்தியப் பேரரசு முடிவிற்கு வந்திருப்பதாக அறியக்கிடக்கிறது.

தடுப்புக் காவல் சட்டத்தின் எதிர்காலத்தை முடிவு கட்டும் பொறுப்பை, அடுத்த பொதுத் தேர்தலின் விளைவாக உருவாகும் மக்கள் சபையிடம் ஒப்படைப்பது என்ற உள்நோக்கமே, இம்மூன்றாண்டு உயிர்ப்பிச்சைக்குக் காரணமாகும் எனவும் நம்பப்படுகிறது.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும், தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையில் உள்ளவர்களின் தொகை ஏறத்தாழ நூறுக்கு மேல் இல்லாதபோதிலும்கூட, தடுப்புக்காவல் சட்டத்தின் உதவி இன்றியமையாதது என இந்தியப் பேரரசு கருதுகிறதாம்!

## நிறைவேறிற்று!

இந்தியாவும், இந்தோனேஷியாவும் கூட்டு சேர்ந்து, ஐ. நா.-வில் புதிய உறுப்பினர்களை அனுமதிப்பது பற்றிய எல்லா பிரேரேபணைகளையும், ஐ. நா.—வின் பாதுகாப்புச் சபையின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் ஒன்று, பலத்த போராட்டத்திற்கிடையே ஒரு ஓட் மெஜாரிட்டியில் நிறைவேறியிருக்கிறது.

இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 25 நாடுகளும், எதிராக 24 நாடுகளும் 'ஓட்' செய்தனவாம். கனடா உட்பட்ட 6 நாடுகள் இதில் நடுநிலைமை வகித்திருக்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன், மேலும், காமன்வெல்த் நாடுகளில் பெரும்பாலானவையும் இத்தீர்மானத்தைஎதிர்த்தே வாக்குச் செய்தன என்றும் தெரிகிறது.

# உயர்நிலைப் பள்ளி முன் ஆசிரியை உண்ணுநோன்பு

## மனைவியின் முயற்சிக்கு கணவரும் உடன்பாடல்

### போலீஸ்பாதுகாப்பில் 9 மாத குழவி

### சிறையிலும் தம்பதிகள் உறுதி நீடிக்கிறது

பாலக்காடு, நவ. 16—

கோடுவாயூர் அஞ்சல் நிலையத்தில் ஊழியராக உள்ள டி. எஸ். ஜோசப் என்பவரும், அவர் மனைவியான மேரி ஜோசப் என்பவரும், அவ்வூர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி முன், கூட்டாக உண்ணு நோன்பு மேற்கொண்டனர். மேற்படி பள்ளியில், கல்லூரி பட்டம் பெற்ற மேரி ஜோசப் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தார். அன்று மாலை, அவர்களை, கோலங்கோடு போலீஸ் கைது செய்து சிறையில் பூட்டியது.

சிறைக்குள்ளும் அத்தம்பதிகள், உண்ணு நோன்பை விடாது, தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

அத்தம்பதிகளுக்கு, இரண்டரை ஆண்டு நிரம்பப் பெற்ற ஒரு குழந்தையும், ஒன்பதே மாதம் முடிந்த ஒரு குழந்தையும் உள்ளன. அவ்விரண்டு குழந்தைகளையும் போலீஸ் கைப்பற்றிக் கொண்டு, உள்ளூரில் இருக்கும் கத்தோலிக்க விடுதி ஒன்றில் ஒப்படைத்துள்ளது.

ஆசிரியை ஜோசப் வேறு ஊருக்கு மாற்றப்பட்டுவிட்டார் அம்மாற்றுதலுக்கு, மேற்படி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரின் விஷமமே காரணம் எனக்குறிப்பிட்டு, தொடர்புடைய உயர் அதிகாரிகளிடம் ஆசிரியை விண்ணப்பித்துக் கொண்டார். தம் கோரிக்கையை ஒப்புக்கொள்ளாத அதிகாரிகள் மீதும் உள்ளெண்ணம் கற்பித்து ஆசிரியை முறையிட்டார். அதன்பின்னர் ஆசிரியை மீது குற்றம்சாட்டி, அவரைவேலையிலிருந்து இடைக்கால விலக்கம் செய்துவிட்டனர் அதிகாரிகள். இந்த விலக்கல் ஏற்பாட்டை எதிர்த்துத்தான், தம்பதிகள் கூட்டாக உண்ணு நோன்பு மேற்கொண்டனர்.

தங்களுடைய இரண்டு குழந்தைகளையும், தலைமை ஆசிரியர் அறையில் தனிமையில் விட்டு விட்டு, பள்ளி முன், தம்பதிகள் உண்ணு நோன்பில் ஈடுபட்டனர் என்று தெரிய வருகிறது. அனுமதி பெறாதுபள்ளியினுள் நுழைந்ததாக இ. பி. கோ. 447-வது பிரிவுப்படி, மேற்படி தம்பதிகள்மீது போலீஸ் வழக்குப் பதிவு செய்திருக்கிறது.

## கட்டுப்பாடு இல்லை

"தொழிற்சாலைகளில் தீக்குச்சி உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் உத்தேசம் எதுவும் சர்க்காருக்கு இல்லை,"

என்று மத்திய சர்க்கார் வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

## உத்திரவு கிடைத்து விட்டதாம்!

கம்யூனிஸ்டு சீனை எப்பொழுது தாக்கினாலும், அதற்குப் பிரதியாகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, தேசீய சீனப் படைகளுக்கு (சியாங்) மேலிடத்து உத்திரவு கிடைத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## அறப்போர் தொண்டர்களுக்கு சாட்டை அடி

### கோவா சர்க்காரின் மூர்க்கத்தனம்

இத்திங்கள் முதல் வாரத்தில், கார்வார்—கோவா எல்லையோரத்திலிருந்து கோவாவுள் நுழைய முயன்ற 17 அறப்போர் தொண்டர்களை கோவா போலீஸ் கைது செய்தது. வழக்கொன்றும் பதிவு செய்யாமல், அவர்களை சிறையில் தள்ளி, சாட்டையால் நையப் புடைத்து, ஒரு நாள் நடுநிசியில், இந்திய எல்லைக்குள் விரட்டிவிட்டது கோவா சர்க்கார். சில தொண்டர்களின் முதுகில் சாட்டையடி வடுக்கள் இருப்பதாகவும், நிமிர்ந்து நிற்கவோ, நடந்து செல்லவோ முடியாத நிலையில் சிலர் அவதிப்பட்டனர் என்றும், விடுதலை காங்கிரஸ் தகவல் கொடுத்துள்ளது.

## கலாசாலைமாணவர்கள் வெளியேறினர்!

கல்கத்தா பல்கலைக் கழகத்தின் 'பி. காம்.' தேர்வுக்கு விடை எழுத வந்திருந்த சுமார் 400 மாணவர்கள், தங்களுக்குத் தரப்பட்ட வினாத்தாள் மிகக் கடினமாக இருப்பதாகக்கூறி, விடை எழுதாமலேயே வெளியேறிவிட்டனராம்!

## காந்தியாருக்கு சிலை வேண்டாம்!

### அவரது போதனையைக் கடைப்பிடியுங்கள்!

பரோடா, நவ. 16—

காந்தியாரைப் போன்ற தலைவர்களுக்கு சிலைகள் எழுப்பி விடுவது மட்டும் அவர்களுக்குநாம் உண்மையான மரியாதை செலுத்துவதாகாது; காந்தியார் போன்றவர்களின் போதனைகளை வாழ்வில் மேற்கொண்டு மக்கள் நடக்க வேண்டும்; அதுதான் உண்மையாக நாம் அவர்களுக்குச் செய்யும் மரியாதையாகும்,"

என்று, ஜனாதிபதி ராசேந்திர பிரசாத், காந்தியாரின் சிலை ஒன்றைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானப் போக்குவரத்து: ரூ. 127 லட்சம் நஷ்டம்!

### இந்திய அரசாங்கத்தின் 'நிர்வாகத் திறனு'க்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு!

இந்திய விமானப் போக்குவரத்தில் 1951 ஜூலை 31 முடிய ஓராண்டில் ரூ. 127·46 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

அதே நேரத்தில் அந்த ஒரு வருடகாலத்தில் வெளிநாட்டு முதலாளிகள் நடத்துகிற 'ஏர் இந்தியா இன்டர் நாஷனல்' என்ற விமானப் போக்குவரத்துக் கம்பெனி ரூ. 26·60 இலட்சம் இலாபம் அடைந்திருக்கிறது எனத் தெரிகிறது.

இந்தத் தகவலை உதவி மந்திரி ராஜபகதூர் என்பவர் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் வெளியிட்டுள்ளார்.

விமானப் போக்குவரத்து தேசியமயமாக்கப்படுமுன் 1952-ம் ஆண்டில் ரூ. 12·07 லட்சம் மட்டுமே நஷ்டம் ஏற்பட்டதாம்.

அந்த வெளிநாட்டுக் கம்பெனி அந்த ஆண்டில் ரூ. 2.14 லட்சம் மட்டுமே லாபமடைந்திருந்ததாம்.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—11—1954 புதன்


# ஆந்திர ஆட்சி

★

எதிர்பார்த்தபடியே ஆந்திர மாநில ஆட்சி, குடியரசுத் தலைவரின் நேரடியாட்சியாக மாறி விட்டது. மொழி வழியில் ஆந்திர மாநில ஏற்பாடு நிச்சயிக்கப்பட்டதும், அதை உருவாக்கும் பொறுப்பை, நாட்டு நிர்வாகத்தில் முதிர்ந்த பயிற்சி பெற்றுள்ள திருவேதியிடம் இந்தியப் பேரரசு ஒப்படைத்தது. ஆந்திர மாநில ஆட்சியை, வாய்ப்பு ஏற்பட்டால் இடைக்கால ஏற்பாடாகக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டுவரும் நினைப்பு, இந்தியப் பேரரசுக்கும் இருக்கிறதினால்தான், அந்தப் பொறுப்பில் திருவேதி அமர்த்தப்பட்டிருக்கிறார் என நாம் அப்பொழுதே குறிப்பிட்டிருந்தோம்.

திருவேதியை நியமித்த காலத்தில் இந்தியப் பேரரசுக்கு இருந்த எண்ணம் இப்பொழுது ஈடேறி விட்டது. அந்த எண்ணத்தை செயலுக்கு வராமல் தடுக்கும் ஆற்றல் ஆந்திர சட்டசபை உறுப்பினர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

ஆந்திர மாநிலம், குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிக்குள்ளானதற்கு அங்குள்ள சட்டசபை உறுப்பினரிடை காணப்பட்ட ஒற்றுமைக் குறைவே முக்கிய காரணமாக இருந்த போதிலும், அதற்காக அந்த உறுப்பினர்களைப் பொறுப்பாக்குவதிலும் பொருளில்லை— நொந்து கொள்வதிலும் நியாயமில்லை.

குறிப்பிடத்தகுந்த கொள்கை அடிப்படையில், ஆந்திர சட்டசபையில் இடம் பெற்றிருந்தவை இரண்டே இரண்டு கட்சிகள்தான்; ஒன்று காங்கிரஸ்; மற்றொன்று கம்யூனிஸ்டு கட்சி. மற்றவற்றைக் கட்சிகள் என்று குறிப்பிடுவதைக் காட்டிலும், உருப்படியான கொள்கை அடிப்படை இல்லாது பதவி தேடும், சில பெரியவர்களைக் கொண்ட சிறு சிறு பிரிவுகள் என்று கூறுவதே பொருந்தக்கூடியதாகும்.

புதிய மாநிலம் துவங்கப்படும் போதே, மக்களாட்சி முறைக்குச் சீட்டுக் கொடுத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு இடந் தருவது அவலட்சணமாகும் என்ற சிந்தாகூலமே, பிரகாசம் ஆட்சிக்கு ஒரு வாய்ப்பாக முடிந்தது. எப்படியும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படாமல் தடுத்துவிட வேண்டும் என்ற காங்கிரசின் கெடுமதி, பிரகாசம் ஆட்சியை ஒப்புக்கொள்ளவும், அவர் போட்ட நிபந்தனைப்படி அமைச்சர் குழுவில் சேர்ந்து, அந்த அமைச்சர் குழுவை தம் அமைச்சர் குழு எனக் கூறிக்கொள்ளவுமான கட்டாயத்தைக் காங்கிரசிற்கு உண்டாக்கியது.

ஆந்திர கேசரியை ஆதரிக்கக் காங்கிரஸ் தயக்கம் காட்டியிருக்குமானால், தனது சகாக்களுடன் கம்யூனிஸ்ட் கட்சியைக் கூட்டாகச் சேர்த்துக் கொண்டு, ஒரு அமைச்சர் குழுவை அவர் உருவாக்கியே இருப்பார். அந்த நேரத்தில் அத்தகு சூழ்நிலை ஆந்திராவில் இருக்கவும் இருந்தது.

தனது தியாகத்தால் கட்டி வளர்த்த காங்கிரசை விட்டு விலகி, அதைப் பொதுத் தேர்தலில் எதிர்த்து நின்று வெற்றி பெற்று, காங்கிரசையே தூற்றி வந்த ஆந்திர கேசரியைப் பழி வாங்கித் தீரவேண்டும் என்ற நினைப்பு ஆந்திர காங்கிரசிற்கு என்றும் உண்டு. ஆனால், ஆந்திர மாநிலத் துவக்கக் காலத்தில் அங்கிருந்த சூழ்நிலை, தனது நினைப்பை மறைத்து வைத்துக் கொண்டு, கேசரியுடன் கூடிக் குலாவ வேண்டிய கட்டாயத்தைக் காங்கிரசிற்கு உண்டாக்கிற்று. ஆனால், அந்தப் பழி வாங்கும் இயல்பை காங்கிரஸ் கைவிட்டு விடவில்லை. அதற்கு மாறாக, வாய்ப்புக் கிடைத்ததும் பிரகாசத்தை முதுகுப் புறத்தில் குத்தி, பதவியிலிருந்து உருட்டிவிட்டது காங்கிரஸ். இதன் விளைவுதான், ஆந்திர அமைச்சர் குழுவின் வீழ்ச்சி.

இப் பழிவாங்கும் போக்கை ஏன் காங்கிரஸ் ஏற்கனவே மேற்கொள்ள முன்வரவில்லை என்ற கேள்வி பிறப்பதும் எதிர்பார்க்கக் கூடியதே. தம் கையில் ஆட்சி சிக்கினால், அச்சுறுத்தியும், ஆசை மூட்டியும், சுயேச்சை சட்டசபை உறுப்பினர்களையும், கம்யூனிஸ்ட் கட்சி நீங்கலாக, பெயரளவிற்கு இருக்கும் பிற கட்சிகளைச் சேர்ந்த சில உறுப்பினர்களையும் காங்கிரஸ் கட்சிக்குள் கொண்டுவந்து, முடிவாக ஆந்திரகேசரியை விரட்டி விடலாம் என்பது காங்கிரசின் உட்கருத்தாக இருக்கக்கூடும் என யூகிப்பதற்கு இடமுண்டு.

பிரகாசத்தைத் தம்முடன் சேர்த்துக்கொண்டதற்கும், பழிதீர்த்துக்கொள்ள முனையாமல் ஆதரவு காட்டி வந்ததற்குமான மற்றொரு காரணமாக, காங்கிரசிற்கு இருந்த தேர்தல் அச்சத்தையும் குறிப்பிடலாம். பொதுவாகத் தேர்தல்கள் அனைத்தும், குறிப்பாக சட்டசபைத் தேர்தல்கள், பணத்தை ஆயிரக்கணக்கில் விழுங்கி ஏப்பமிடும் அரசியல் விவகாரமாக இருந்துவருவதை அனைவ நம் அறிவர். உடனடியாகத் தேர்தல் வைப்பது என்றால், காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் கலந்துகொள்வதற்கே, ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிடும். தேர்தல் முடிவும் தனக்குச் சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையும் காங்கிரசிற்குக் கிடையாது. எனவே, பிரகாசத்தை ஆதரிக்கவும், அவர்மீது பழிவாங்குவதை, அதற்கான காலம் வரும் வரை தள்ளிப்போட்டு வரவும், காங்கிரஸ் ஒப்பியது.

'தேர்தலை நடத்து! வெற்றி காங்கிரசிற்கே' என மார் தட்டுவதிலிருந்தே, அதற்கான சூழ்நிலை இப்பொழுதுதான் உருவாகி இருக்கிறதாகக் காங்கிரஸ் முடிவுகட்டி இருக்கிறது. அதனால்தான் பிரகாசம் மந்திரி சபையையும் தொலைத்துத் தலை முழுகி இருக்கிறது காங்கிரஸ் என்பதும் விளக்கமாகிறது. இதுவரை தேர்தல் வேண்டாம்; எப்படியாது பெயரளவிற்காவது ஆட்சியில் ஒட்டிக் கொண்டு இருந்தால் போதும் என, ஆந்திர சட்டசபையில் தோல்விமேல் தோல்வி கிடைத்த பொழுதெல்லாம், அவைகளுக்குத் தத்துவார்த்தம் கூறிக்கொண்டிருந்த காங்கிரஸ், இப்பொழுது 'தேர்தல் தேர்தல்' எனக் கூவுகிறது என்றால், அதில் ஏதாவது உண்மை மறைந்து கிடக்கத்தான் வேண்டும்.

மதுவிலக்கு பற்றி இராமமூர்த்தி சிபாரிசுகளை நிறைவேற்றியாக வேண்டும் எனச் சட்டசபை, அமைச்சர் குழுவிற்கு எதிராக முடிவு கூறின உடனேயே, மக்களாட்சி முறையில் காங்கிரஸ் கட்சிக்கு நம்பிக்கை இருக்குமானால், உடனே காங்கிரஸ் பதவியைத் துறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், அந்தப் பெருங் குணத்தை அதனிடமா எதிர்பார்ப்பது? தம்மீது நம்பிக்கை இல்லை என சட்டசபை தீர்ப்பளிக்கிறவரையில் காங்கிரஸ் அமைச்சர் குழு காத்திருந்திருக்கிறது. நம்பிக்கையின்மை தீர்மானத்தை, எப்படியாவது, கடைசி கட்டத்திலாவது தோற்கடித்து விடலாம் என்ற அற்ப நினைப்பினால்தான், பதவியை விட்டு விலகாமல் இறுதிவரை பதவியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தது காங்கிரஸ். ஆனால், அதன் எண்ணம் ஈடேறவில்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவரே, காங்கிரஸ்மந்திரிசபையைக் கவிழ்த்து விட்டனர். இதற்கும் கட்சிக்குள் இருக்கும் உட்பகையே காரணம்.

நியமன காலத்தில் எதிர்பார்த்து நியமித்ததுபோலவே, திருவேதி, ஆந்திர மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பாளராக ஆகி விட்டார்.

# கல்கத்தா நகரசபையில் வரி கொடுப்போர் ஆர்ப்பாட்டம்!

## கூட்டம் 40 நிமிடம் ஒத்திவைப்பு

12-ந் தேதியன்று நடைபெற்ற கல்கத்தா நகரசபைக் கூட்டம், வரி கொடுப்போர் சிலர் செய்த ஆர்ப்பாட்டம் காரணமாக 40 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

கோவிந்தப்பூர் பகுதியைச் சேர்ந்த வரி கொடுக்கும் மக்களில் 40 பேர், உதவி மேயரைக் கண்டு தங்கள் குறைகளைக் கூறவேண்டுமென்று கூறினார்களாம்.

சாலைகளைச் சீர்ப்படுத்துவது அதிக விளக்குகள் அமைத்துத் தருவது, குடிதண்ணீர் வசதி செய்து தருவது போன்ற குறைகளைப் போக்க வேண்டுமென்று நேரடியாக எடுத்துக்கூற அவர்கள் நகரசபைக் கட்டிடத்திற்கு வந்திருந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த உதவி மேயர், கூட்டம் முடிந்ததும் ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளைப் பார்ப்பதாகக் கூறினர்.

ஆனால் கூட்டம் ஆரம்பமாகியதும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்களாம். இதனால் கூட்டம் நடைபெற முடியாமற் போகவே, உதவி மேயர் கூட்டத்தை ஒத்திவைத்து, பின்னர், ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினர்.

நகர சபைக்கு வரி கொடுக்கும் இவர்களின் கோரிக்கைகளைக் கவனித்து ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட இலாகா தலைவர்களுக்கு உத்தரவிடுவதாக உதவி மேயர் உறுதியளித்தார் என்று தெரிகிறது.

இதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர் என்றும், 40 நிமிட நேரத்திற்குப் பின்னர் நகரசபைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றதாகவும் தெரிகிறது.

### கடன் உதவுகிறார்கள்

நகர சுத்தம் செய்வதற்குத் தேவைப்படும் மோட்டார் லாரிகள் வாங்கவும், இடுகாடுகளுக்கான இடங்களை விலைக்கு வாங்கவும், சென்னை நகர சபைக்குச் சென்னை சர்க்கார் ரூ 2 லட்சம் கடனுதவி அளித்துள்ளனர்.

# நமது பணி பலன் தருகிறது

## சத்திரத்து நிதி கல்லூரி கட்ட!

தஞ்சை மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்துவரும் இராஜா சத்திரத்தின் நிதியிலிருந்து, தஞ்சாவூரில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் கல்லூரிக்காக ரூ. 5 லட்சத்தை உபயோகித்துக் கொள்ள சென்னை சர்க்கார் அனுமதித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபைக் கூட்டத்தின்போது இது சம்பந்தமாக சத்திரத்தின் நிதியை உபயோகித்துக்கொள்ள சட்டத் திருத்தமொன்றும் கொண்டுவரப்படும்.

இந்தக் கல்லூரிக்காக, திருவாவடுதுறை ஆதீனத்தார் ரூ. 60,000-மும், கலைக் கண்காட்சி குழுவினர் தஞ்சையில் நடத்திய கலைக் கண்காட்சியின்போது கிடைத்த ரூ. 40,000-மும் கொடுத்திருக்கிறார்களாம்!

## இந்தியாவைப் பின்பற்றுவோம்!

தமது நாடு சுயாட்சி பெற்றதும், அகில உலக விவகாரங்களில் இந்தியா கடைபிடித்துவரும் நடுநிலைமைக் கொள்கையையே பின்பற்றும் என்று, சூடான் நாட்டுப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

சூடான் நாடு, எகிப்துக்கோ அல்லதுபிரிட்டனுக்கோகட்டுப்பட்டிராமல்; பூரண சுதந்திரம் பெற்ற ஒரு தனி சுயாட்சி நாடாகவேண்டுமென்று அவர் விரும்புவதாகத் தெரிகிறது.

## நகரங்களில் வேலை நிலைமை

ஒரு லட்சமும், அதற்கு மேற்பட்டும் ஜனத் தொகை கொண்ட சுமார் 20 நகரங்களிலும், சென்னை பம்பாய், டில்லி, கல்கத்தா ஆகிய பெரிய 4 நகரங்களிலும், தற்போதைய வேலை நிலைமை குறித்துத் தகவல் சேகரிக்கும் 'யூனிட்'டுகளைத் திட்டக் குழு கேட்டுக் கொண்டிதற்கிணங்க, இப்போது 'சர்வே' நடைபெற்று வருகிறது.

இதுவரையிலும், சென்னையில் சுமார் 1,000 வீடுகளில் மேற்படி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளனவென்றும், அடுத்த ஆண்டு மார்ச்சு திங்கள் முடிவுக்குள் சுமார் 3,000 - வீடுகளில் தகவல்கள் சேகரிக்கப்படுமெனவும் கூறப்படுகிறது.

இவ்விவரங்களைச் சேகரிப்பதற்காகச் சென்னை நகரம் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும், நகர கமிஷனர், நகர சபை அதிகாரிகள் ஆகியோரின் உதவியுடன் 'சர்வே' நடத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

## வசதியளித்தனர்

மேல் நாடுகள் சிலவற்றில் ரயில்வே கடைசி வகுப்புப் பிரயாணிகளும் சாப்பாட்டு வசதிக்கான உணவு வண்டிகளைப் பயன்படுத்திக்கொள்வதுபோல், இந்தியாவிலும், கடைசி வகுப்புப் பிரயாணிகளும் இனிமேல் உணவு வண்டிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ரயில்வே குழு தீர்மானித்துள்ளது.

மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள், குறிப்பிட்ட சாப்பாட்டு நேரங்களில் மட்டும்தான் உணவு வண்டிகளில் பிரயாணம் செய்யலாம் என்றும் அக்குழு கட்டளையிட்டுள்ளது.

# அமெரிக்காவின் 'இன ஒதுக்கல்' பிரச்சினை

## நீக்ரோவர் வெள்ளையருடன் சேரக் கூடாதென கவர்னர்கள் ஓலம்!

அமெரிக்காவில் உள்ள பள்ளிக்கூடங்களில் வெள்ளை இனக் குழந்தைகளும், நீக்ரோ குழந்தைகளும் ஒன்றாகவே படிக்க வேண்டும் என்று அமெரிக்க தலைமை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதும், அதையொட்டி, வாஷிங்டன், நியூயார்க், மற்றும் பல ராஜ்யங்களில் மாணவர்கள் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம்இவையெல்லாம்நடைபெற்றதும் நினைவிலிருக்கலாம்.

என்றாலும்கூட, வெள்ளையர்களிடத்தில் நீக்ரோக்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்கிற மனப்பாங்கு வந்தபாடில்லை.

7 ராஜ்யங்களின் கவர்னர்களும், ஒரு ராஜ்யத்திற்கு கவர்னராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவரும், அமெரிக்கப் பள்ளிகளில் நீக்ரோ மாணவர்களும், அமெரிக்க மாணவர்களுடன் சேர்ந்து படிக்கச் செய்யப்படுகிற முயற்சிகளைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர் என செய்தி வெளியாகியுள்ளது.

தென் இராஜ்ய கவர்னர்களின் மாநாடு ஒன்று, இந்த நீக்ரோ இன ஒதுக்கல் பிரச்னைமீது திட்டமான முடிவேதும் மேற்கொள்ளாத நிலையில் முடிவுற்ற பின்னரே அந்த கவர்னர்கள் கண்டன அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட வேறு ஐந்து இராஜ்யங்களின் கவர்னர்கள் அந்த அறிக்கையில் கையொப்பமிடவில்லை.

'மெரிலண்ட்' என்ற ராஜ்ய கவர்னர், "இந்தப் பிரச்னையில் தலைமை உயர்நீதி மன்ற முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டியதே அமெரிக்க மக்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என்பதே எனது கருத்து" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# பெண் உரிமை: ஜனாதிபதி கருத்து

மக்கள் சமுதாயத்தில் பெண்களுக்குச் சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதைத் தாம் வரவேற்பதாகவும், அவ்வாறு பெண்களுக்குச் சம உரிமை அளிக்க அரசியல் சட்டங்கள் இருந்தும், சமுதாயம் அதைச் சரிவர நடத்தவோ மேற்கொள்ளவோ முன்வராதது மிகவும் வருந்தத்தக்கது என்று, அகமதாபாத்தில் ஒரு அனாதைகள் விடுதியைத் திறந்து வைத்துப் பேசுகையில், குடியரசுத் தலைவர் இராசேந்திரர் குறிப்பிட்டிருக்கிறார்.

# ஓராசிரியர் பள்ளிகள்

தஞ்சை மாவட்டத்தில் மேலும் 118 ஓராசிரியர் பள்ளிகளைத் திறக்க, சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

# கழகச் செய்திகள்

## மஞ்சவாடியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

5—11—54 மாலை பாடசாலை மைதானத்தில் மஞ்சவாடி தி. மு. கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி, கழக இலட்சியங்களை விளக்கி, கொடியேற்றிவைத்தார். தோழர்கள் அன்புக்கரசு, ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பேசியபின், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கழக இலட்சியங்களை விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு முன் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

## கல்லுக்குழி—(திருச்சி)யில் தி. மு. க. பொதுக்கூட்டம்

7—11—54ல், திருச்சி கல்லுக்குழியில் தோழர் மு. ரெத்தினம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், இரயில்வே அலுவலகங்களில் பணியாற்றும் குமாஸ்தாக்களிடையே இந்தி மொழியைத் திணிக்கிற ஆதிக்க வெறிப் போக்கைக் கண்டித்தும், திராவிட நாடு பிரிவினையினால் கிடைக்கும் நன்மைகளையும் எடுத்துரைத்து தோழர் என். வி. நடராசன் அரியதோர் சொற்பொழிவாற்றினர். தோழர்கள் ஆற்றலழகன், எம். எஸ். மணி, அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர். பின்னர், கல்லுக்குழி, உலகநாதபுரம் பகுதிகளில் சாக்கடை நீர் தேக்கங்களால் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி, ஆவன செய்து மக்கள் நலனில் கவனம் செலுத்துமாறு பொன்மலைப்பட்டி ஊராட்சி மன்றத்தைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திருப்பத்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

14-11-54 மாலை 6-30 மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. இ. நாச்சியப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. லோகநாதன், க. நெடுஞ்சோழன் ஆகியோர் பேசியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், 'இன்றைய அரசியல் நிலை' என்பது குறித்து நீண்டதோர் உரையாற்றினர்.

## அய்யப்பநாய்க்கன் பட்டி தி.மு.க. அமைப்புகூட்டம்

7—11—54 மாலை 6½ மணிக்கு, தோழர் ஆ. குருசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வீ. துரைசாமி; துணைச் செயலாளர்: ரா. பிச்சை; பொருளாளர்: சு. முருகேசன்; விளம்பர உறுப்பினர்: பெ. சன்னாசி; மாவட்டப் பிரதிநிதி: வீ. பெரியகருப்பன். செயற்குழு உறுப்பினர்கள்: மு. பழனியப்பன், மு. கழுவன், சீ. கார்மேகம், பெ. பால்ச்சாமி, ரா. கருத்தக்கண்ணன். பின்னர் கழக இலட்சியங்கள் பற்றி தோழர் ஆ. குருசாமி சொற்பொழிவாற்றினார்.

## திருப்பூர் தி. மு. கழகம்

7—11—54-ல் 'அறிவொளி நாடக மன்றத்'தில், தோழர் கோவைச்செழியன் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழக செயற் குழுக் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மொ. நா. அண்ணாமலை; துணைச் செயலாளர்: இரா. பாலசுந்தரம்; பொருளாளர்: இரா. தயாளன்.

## மண்பறை தி. மு. கழகம்

16—10—54 இரவு 10 மணியளவில் தோழர் டி. பி. அழகமுத்து தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: சி. பசவலிங்கம்; துணைச் செயலாளர்: மு. நல்லுசாமி; பொருளாளர்: சே. கணபதி; மாவட்டப் பிரதிநிதி: மு. பொன்னுசாமி. செயற்குழு உறுப்பினர்கள்: மு. பொன்னுசாமி; மு. நல்லுசாமி, உ. பொன்னுசாமி, சி. பசவலிங்கம், சே. கணபதி, கோ. ராமன், வீ. அயினன், ரா. ராசன், க. கந்தன், ந. சுப்பையன், வீ. கோவிந்தன்.

* * *

7—11—54 இரவு 7 மணிக்கு தோழர் டி. பி. அழகமுத்து தலைமையில் இவ்வூர் திரு. வி. க. மைதானத்தில் நடைபெற்றக் கழகத் திறப்பு விழாவில் தோழர்கள் சபாபதி, மருதமுத்து, வெல்லையன், மற்றும் சிலரும் சொற்பொழிவாற்றினர்.

## திடீர் நகர் தி. மு. கழகம்

24—10—54ல் எஸ். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மதுரை மேற்கு வட்டார திடீர் நகர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: கே. எஸ். சந்தானம்; துணைச் செயலாளர்: எஸ். கிருஷ்ணசாமி; பொருள் காப்பாளர்: எஸ். ராமச்சந்திரன்; விளம்பர உறுப்பினர்: வி. சுந்தரம்; மாவட்டப் பிரதிநிதிகள்: சந்தானம், ஜி. ஆர். சந்திரன்; பொறுப்பாளர்: என். அண்ணாதாசன்; செயற்குழு உறுப்பினர்கள்: மு. சக்திவேல், க. வேலு, எ. கே. சண்முகராசு, மு. கருப்பையா, போ. பாலு, க. அருணாசலம், ஜமால்தீன், கோ. அழகர்சாமி, பாலகிருஷ்ணன், ஏ. சண்முகம், திருவெங்கடம்

### கழகத் துவக்க விழா

26—10—54ல், தோழர் எஸ். முத்து தலைமையில் துவக்க விழா நடைபெற்றது. தோழர் ஈரோடு நாராயணன் பேசியபின், தோழர் கே. எஸ். சந்தானம் தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். பின்னர், திடீர் நகருக்குக் குடிதண்ணீர் வசதியும், மின்சார விளக்கு வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்றும், மழைக் காலங்களில் மேற்படி பகுதியில் தண்ணீர் தேங்கிவிடாதபடி பள்ளங்களை மேவ வேண்டும் என்றும் நகர சபையினரை கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

4—11—54ல், தோழர் கே. எஸ். சந்தானம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் 21—11—54ல் மதுரை வரும் முதலமைச்சர் காமராசரிடம், இவ்வூரிலுள்ள ஏழை மக்களுக்கு தற்சமயம் குடியிருந்துவரும் இடங்களை ஜாரி செய்து தரவும், அவர்களுக்குத் தேவையான மற்ற வசதிகள் பலவும் செய்து தரும்படியும் கேட்டுக் கொண்டு, தோழர் சந்தானம் தலைமையில் ஒரு மகஜர் தருவதென்று முடிவு செய்யப்பட்டது.

## கோவை—செல்வபுரம் தி. மு. கழகம்

24-10-54 காலை 11 மணிக்கு, தோழர் அ. நெடுஞ்சேரன் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழக 3-வது ஆண்டு விழாவில், தோழர்கள் ப. கு. திருமூர்த்தி, இரா. சுந்தரம், ச. தமிழ்மணி, செழியன் செ. அ. இராசமாணிக்கம் ஆகியோர் பேசிய பின், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் நீண்டதோர் சிறப்புரை ஆற்றினர்.

## குளச்சல் தி. மு. கழகம் (நாஞ்சில் மாவட்டம்)

31—10—54 மாலை 7 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் ஜே. எம். ஜோசப் தலைமையில் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: டி. சி. குற்றாலம்; துணைச் செயலாளர். பி. எம். கண்ணு; பொருளாளர்: எஸ். எம். எஸ். அமீது; விளம்பர உறுப்பினர்: கே. பி. எம். எஸ். மல்க்கர்; செயற்குழு உறுப்பினர்கள்: பி. நடராசன், எம். பழனி, ஏ. நீலராஜ், எஸ். டி. சபாநாயகம், பி. லத்தீபு, ஏ. எம். செய்து முகமது.

தோழர் பி. எம். கண்ணு 'நமது கட்டுப்பாடு வளர்ச்சி' என்பது பற்றி சொற்பொழிவாற்றிய பின், தேசிக விநாயகம் மறைவுக்கு அநுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கணியூர் தி. மு. கழகம்

3—11—54 இரவு 8 மணிக்கு தோழர் எம். கணபதி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், முன்னாள் செயலாளர் நீக்கப்பட்டு, புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:— செயலாளர்: எம். கணபதி; துணைச் செயலாளர்: கே. ஏ. சந்திரசேகரன்; பொருளாளர்: கே. வி தியாகராசன்; விளம்பர உறுப்பினர்கள்: எஸ். ஏ. அபூபக்கர், துரைசாமி; மாவட்டப் பிரதிநிதி: கே. ஏ. முருகேசன்; செயற் குழு உறுப்பினர்கள்:—கே. வி. தியாகராசன், எம். கணபதி, கே. ஏ. சந்திரசேகரன், கே. ஏ. துரைசாமி, எஸ். ஏ. அபூபக்கர், கே. ஆறுமுகம், கே. எஸ். முத்துக்கருப்பணன், ச. குருநாதன், கே.ஏ. முருகேசன், எம். மகாலிங்கம், எம். கிருஷ்ணசாமி, கே. ஏ. கோபால்சாமி, ஏ. பழனியப்பன், ஏ. திருமூர்த்தி, கே. கந்தசாமி, கே. ஏ. முருகேசன், கே. எம். முருகேசன், பி. குருசாமி, எம். சுப்பையன்.

விரைவில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## புதுக்கோட்டை தி. மு. க.

4—11—54-ல், கழகக் கட்டிடத்தில், தோழர் இரா. சுப்பையா தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: எஸ். ஆர். துரையரசன்; துணைச் செயலாளர்: ஏ. அந்தோணிமுத்து; பொருளாளர்: எஸ். காசி; துணைப் பொருளாளர்: எம். ஆர். பிச்சக்கனி; விளம்பர உறுப்பினர்கள்: இரா. சுப்பையா, எம். ஏ. எம். முத்து; செயற்குழு உறுப்பினர்களாகவும், கழக உறுப்பினர்களாகவும் 15 தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சென்னை 3-வது வட்ட தி. மு. கழகம்

5—11—54 இரவு 8 மணிக்கு, தோழர் வி. கே. பி. சாமி தலைமையில் நண்டபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், செப்டம்பர் மாத வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டு பின், தோழர் மா. அமிர்தநாயகம் மாவட்ட உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சென்னை 26-வது வட்ட தி. மு. கழகம்

7—11—54 காலை 10-30 மணியளவில், தோழர் ஏ. கணேசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், செயலாளர் தோழர் அ. குப்புசாமி அவர்களின் ராஜினாமா கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டும், மறுதேர்தல் நடைபெறும் வரையில் துணைச்செயலாளர் ஏ. கணேசன் அவர்களிடம் எல்லா பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டும், டிசம்பர் திங்களில், கழகத் திறப்பு விழாவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பம்பாய் — மாதுங்கா தி. மு. கழகம்

7—11—54-ல் தோழர் ஏ. எஸ் ஆசைத்தம்பி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழு கூட்டத்தில், வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

## வாணியம்பாடி தி. மு. க.

7—11—54ல், இவ்வூரில், தோழர் டி. ஏ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றக் கழகச் செயற்குழு கூட்டத்தில், கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தி, அவர்கள் மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்திருப்பதைக் கண்டித்தும், உயிர் நீத்தத் தோழர்களின் குடும்பத்தாருக்கு கழகச் சார்பில் ரூ. 100-க்கு மேலான தொகையை பொதுச் செயலாளர் அண்ணா அவர்களிடம் அளித்துக்கொடுக்கச் செய்யவும், கழகத்தின் வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும், கழகச் சார்பில் விரைவில் ஒருபொதுக் கூட்டம் நடத்துவதெனவும், அக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க செயலாளர் தோழர் ஆறுமுகத்திற்கு முழு பொறுப்பளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ...பட்டினம் தி. மு. க.

7—11—54 மாலை 4½ மணிக்கு கழகக் கட்டிடத்தில், தோழர் கே. கே. சித்திரவேலு தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களின் பொதுக்கூட்ட வரவு - செலவு கணக்கு, கழகக் கட்டிட வாடகைக் கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டபின், அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், திராவிடர் திருநாளான பொங்கல் விழாவை இரண்டு நாட்கள் சிறப்புற நடத்துவதென்றும், அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட செயலாளருக்கு அனுமதி அளித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

## தென்காசி தி. மு. கழகம்

7—11—54ல், நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர் டி. குருசாமி கழகப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், டிசம்பர் திங்கள் துவக்கத்தில், ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## சுருளிப்பட்டி தி. மு. கழகம்

8—11—54-ல் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: இரா. சு. மணி; துணைச் செயலாளர்: வெ. விசயராமன்; பொருளாளர்: இரா. குலசேகரன்; விளம்பர உறுப்பினர்: கு. பொன்ராமு; மாவட்டப் பிரதிநிதி: சி. அ. அழகிரி. 40 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

* * *

### பொதுக் கூட்டம்

10—11—54 மாலை 7 மணிக்கு தோழர் கே. ஏ. கலையழகன் தலைமையில் இவ்வூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டியதின் அவசியம் குறித்தும், சமுதாயத்திலுள்ள மூட நம்பிக்கைகளை ஒழிப்பது குறித்தும் தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், கே. ஏ. கலையழகன் ஆகியோர் பேசினர். கூட்ட முடிவில், தோழர் எஸ். முத்து கழகக் கொடியேற்றுவித்தார்.

ஃ ஃ ஃ

11—11—54 காலை 10 மணியளவில், மேற்படி தோழர்கள், கம்பம் நகர் தி. மு. கழகத் தோழர்களிடையே உரையாடியும், மாலை 3 மணிக்கு புதுப்பட்டி தி. மு. கழக ஊழியர் கூட்டத்திலும் பேசினர்.

## எண்கண் தி. மு. கழகம்

8—11—54 மாலை 8 மணிக்கு தோழர் எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழக நிர்வாகக் குழு கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: எஸ். சோமு; துணைச் செயலாளர்: எஸ். டி. சம்பந்தம்; பொருளாளர்: வி. சௌரிராசன்; விளம்பர உறுப்பினர்: எஸ். இராமச்சந்திரன்; செயற்குழு உறுப்பினர்கள்: வி. கோவிந்தசாமி, டி. கே. இராசகோபால், பி. பாலகிருட்டிணன், கே. ருத்திராபதி, வி. கே. கருணாநிதி, எஸ். சௌந்திரராசன், ஆர். சின்னையன்.

## ஆனையாம்பட்டி (ஆத்தூர்வட்டம்) தி.மு.க.

9—11—54 மாலை 8 மணிக்கு, தோழர் எஸ். அப்பாவு இல்லில்; தோழர் சென்ராயன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், பொருளாளர் தோழர் சோலை முத்துவின் விலகுதல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தோழர் தங்கராசு பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயற்குழு உறுப்பினர்களில் தோழர்கள் எஸ். சின்னையன், இராமன், கொ. இராசக்கண்ணு, சின்னு ஆகிய நால்வரையும் விலக்கிவிட்டு அவர்களுக்குப் பதில் தோழர்கள் பெ. தங்கராசு, ஆர். மாரிமுத்து, அ. குள்ளலாண்டி, ம. சிவன் ஆகிய நால்வரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். விரைவில், இவ்வூரில் கழகச் சார்பாக ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## உலிபுரம் தி. மு. கழகம்

10-11-54 மாலை 7½ மணிக்கு, கழக அலுவலகத்தில் நடைபெற்ற இவ்வூர் கழக உறுப்பினர் கூட்டத்தில், கழகத்தின் ஆண்டு விழாவை டிசம்பர் திங்கள் இறுதி வாரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## இடையகோட்டை தி. மு. கழகம்

11—11—54, மாலை 3 மணிக்கு சம்பத் படிப்பகத்தில் தோழர் கே. டி. பதி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில், மு. பன்னீர்ச்செல்வன் அவர்கள் அவ்வூரிலுள்ள இரண்டு கழகத் தோழர்களின் இல்லங்களில் பறக்கவிட்டிருந்த கழகக் கொடியை, தேசியத் தோழர் ஒருவர் அகற்றிவிட்டதைக் கண்டித்தும், கழகக் கொடிகளை அகற்றிவிடுவதால் மட்டும் கழகக் கொள்கைகளை அழித்துவிட இயலாதென்பதைச் சுட்டிக்காட்டியும்பேசியபின், வருகிற டிசம்பரில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கான அலுவல்களை மேற்கொள்ள தோழர் அனீபா நியமிக்கப்பட்டார்.

## பாபநாசம் தி. மு. கழகம்

12—11—54 மாலை 6 மணிக்கு, தோழர் அ. தாஜுதீன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கழகத் துவக்க விழாவை வருகின்ற டிசம்பர் திங்கள் முதல், அல்லது இரண்டாவது வாரத்தில் நடத்துவதெனவும், மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## நெல்லை தி. மு. கழகம்

14—11—54 காலை 10 மணியளவுக்கு, தோழர் வே. ஞானக்கண் தலைமையில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் நிர்வரகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: வெ. திருப்பாற்கடல்; துணைச் செயலாளர்: சு. இரா. கந்தசாமி; பொருளாளர்: சி. சி. சத்தியப்பெருமான்; செயற்குழு உறுப்பினர்கள்: இரா. சு. இராமச்சந்திரன், மு. பெரியசாமி, வே. ஞானக்கண், ம. சு. பிச்சக்கண்ணு, எம். சண்முகம், எஸ். கோவிந்தன், ஜி. வேதாசலம், பெ. தி. ந. நாராயணன், சு. சுப்பிரமணியம், மா. சண்முகம், ஏ. பி. முத்து, பா. இராமச்சந்திரன், பி. கே. ஜோசப்.

# கிரிமினல் சட்டத் திருத்த மசோதா

## தனிக் குழு செய்துள்ள மாற்றங்கள்

இந்தியப் பாராளுமன்றத்தில் கிரிமினல் சட்டத் திருத்த மசோதாவின் தனிக்கைக் குழு அறிக்கையை உள்நாட்டமைச்சர் கட்ஜு விவாதத்திற்கு வைத்தார்.

இந்தத் திருத்த மசோதாவின் நோக்கம் பற்றி அவர் குறிப்பிடுகையில், குறுகிய காலத்தில் வழக்கு விசாரணைகளை முடிக்கவேண்டுமென்பதுதான் என்றும், விசாரணையை துரிதப்படுத்துவது என்பதால் அவசரமாக நீதி வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதாகாதென்றும், இந்த மசோதாவினால், நடைபெற்ற குற்றத்தைப் பற்றிய எண்ணங்கள் மனதில் இருக்கும் போதும், பொதுமக்கள் மனதில் அக்குற்றம் பற்றிய கருத்து மறையா முன்னமேயே விசாரணை நடைபெற்று விட வேண்டும் என்பதுதான் என்றும் கட்ஜு கூறினார்.

தனிக் குழுவினர் இந்த மசோதாவில் செய்துள்ள மாற்றங்களில் முக்கியமானது அபராதம் பற்றியதாகும்; குற்றத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடு தருவது பயன் அளிக்கும் என்று நீதிபதிகள் கருதினால் தண்டனையுடன் அபராதத் தொகையும் விதிக்கப்படலாம் என்று தனிக் குழு மாற்றம் செய்திருக்கிறது.

பணத்தைவிட உயிரை சாதாரணமாகப் பலர் மதிக்கிறார்கள் என்றும், குற்றம் புரிந்தால் குற்றவாளியின் உயிர் மட்டுமின்றி உடைமையும் பறிபோகுமென்ற எண்ணம் ஏற்பட்டால் கிராமங்களில் குற்றங்கள் வெகுவாகக் குறையலாம் என்றும் கட்ஜு குறிப்பிட்டார்.

சர்க்கார் அதிகாரிகள் பற்றிய அவதூறுக்கு வழக்கு தொடுக்கும் உரிமையை போலீசாரிடம் விடாமல், சர்க்கார் வழக்கறிஞருக்குக் கொடுக்க வேண்டும் என்றும், அவதூறினால் பாதிக்கப்பட்டவரின் பிரதிநிதியின் மூலம் சர்க்கார் வழக்கறிஞரிடம் புகார் செய்யலாம் என்றும் தனிக் குழு மாற்றம் செய்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்டோரின் வழக்கு ஆரம்பமாகும் முன்னரே குற்றப் பத்திரிகையின் நகல் ஒன்றை குற்றம் சாட்டப்பட்டோருக்குத் தரவேண்டும் என்று தனிக் குழு மாற்றம் செய்துள்ளது. இந்த நகலுடன் குற்றம் பற்றிய இதர தாக்கீதுகளும் அளிக்கப்படுமாம்.

# புழலேரியில் உள்ள போலீஸ் முகாம்

## மாற்றுவது குறித்து முதன் மந்திரி

''சென்னையை அடுத்துள்ள 'ரெட் ஹில்ஸ்' (புழலேரி) ஏரிக்கரையில் உள்ள போலீஸ் முகாமை வேறு இடத்திற்கு மாற்றுவதென ஏற்கனவே முடிவு செய்தாகிவிட்டது; ஆனால் வேறு தகுதியான இடம் இன்னும் கிடைத்தபாடில்லை,'' என்று முதன் மந்திரி காமராசர் தெரிவித்திருக்கிறார்.

புழல் ஏரிக்கரையில் அந்த போலீஸ் முகாம் இருப்பதால், சென்னை நகர் முழுவதற்கும் தரப்படுகிற ஏரி தண்ணீர் அசுத்தமாகிறது என்று சென்னை நகர சபை கடந்த பல வருடங்களாகவே சொல்லி வருகிறது.

சர்க்காரும் அந்த ஆயுதப் போலீஸ் முகாமை வேறு இடத்துக்கு மாற்றுவது குறித்து தீவிரமாக முயற்சித்து வந்திருக்கின்றனர்.

இதுபற்றிப் பேசிய காமராசர், ''அங்கு முகாம் செய்திருந்த ஆந்திர மாநில போலீசார், முகாமை விட்டு வெளியேறிவிட்டனர் எனவும், இப்போது அங்கிருப்பவர் சென்னை மாநில போலீசார் மட்டும்தான்''எனவும் கூறியிருக்கிறார்.

மேலும் சென்னை மாநில போலீஸ் முகாமும் வேறு இடத்திற்கு மாற்றப்படுவதற்கு இடையில், புழலேரிக் கரையில் போதுமான சுகாதார ஏற்பாடுகள் செய்யப்படுவதாயும், வேறு தகுதியான முகாம் கிடைத்ததும் போலீசார் புழலேரிக் கரையை காலி செய்வர் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

# மன்னர் பதவி கிடைத்தாலும்....

## அதிகாரம் செலுத்த அவரால் இயலாது!

பதவியிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள புகாண்டா நாட்டு மன்னர் கபாக்கா, மீண்டும், அரசியல் சட்டங்களுக்கு உட்பட்ட ஒரு மன்னராகத் தாய் நாடு திரும்ப பிரிட்டன் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது.

புகாண்டா இராஜ்யத்தின் சட்டசபை, புதிய மன்னர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறதற்குப் பதிலாகப் பழைய மன்னரையே வைத்துக்கொள்ள தீர்மானிப்பதாயிருந்தால், அவர் தமது நாடு செல்லத் தடையில்லை என்ற முக்கிய ஒரு நிபந்தனையின் பேரில் பிரிட்டன் அனுமதியளித்துள்ளது.

அப்படியே அவர் தமது பழைய மன்னர் பதவியிலமர்த்தப்பட்டாலும் அந்நாட்டு அரசியல் சட்டத்திற்குட்பட்ட ஒரு மன்னராகத்தான் இனி இருக்க முடியுமே தவிர, முன்னைப்போல் அதிகாரம் அவர் கையிலிருக்காது.

# கழகக் கூட்டம்

★

சென்னை (எழும்பூர்)
18—11—54 மாலை
வீராசாமி பிள்ளை தெருவில்
தலைவர்: முகில்வண்ணன்
பேசுவோர்:
கண்ணதாசன்
முகவை ஆர்.எஸ். பாண்டியன்
ஏ. கே. வில்வம்

## சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

★

''18—11—54 வியாழன் இரவு 9 மணிக்கு, அம்மாப்பேட்டை கழகத்தில், தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் 21—11—54-ல் நடைபெற இருக்கும் ஆண்டு விழா பற்றி யோசிக்க வேண்டியிருப்பதால் எல்லா உறுப்பினர்களும் குறித்த நேரத்தில் வரக்கோருகிறேன்;'' என்று, செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

# காந்தியாருக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

இந்தச் சிலை ரூ. 36,000 செலவில் ஹெர்டொரிங் என்ற சிற்பியால் வெண்கலத்தில் 9 அடி உயரத்துடன் செதுக்கப்பட்டதாகும்.

ஜனதிபதி மேலும் கூறினர்:— ''உலகத்தில் சமாதானம் நிலவ, இராணுவத் தளவாடங்களைக் குவிப்பதல்ல வழி; உலகம் முழுவதும் உண்மையையும், அஹிம்சையையும் பின்பற்ற வேண்டும்.''

# காங்கிரஸ் ஆதரவை நிறுத்திக்கொள்ளலாம்

## குற்றம் சுமத்திய காங்கிரஸ் தலைவருக்கு தி. சோ. மந்திரி நடராசன் தரும் பதில்

''திரு — கொச்சியில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பி.-சோ. கட்சிக்கு, காங்கிரஸ் கட்சியினர் தந்து வரும் ஆதரவை, என்று வேண்டுமானாலும் அவர்கள் நிறுத்திக் கொள்ளலாம்—பி.-சோ. கட்சி ஆட்சியை ஆதரிக்க முடியாது என்று அவர்கள் நினைக்கும் நேரத்தில்; இன்று அப்படி ஒரு நிலை இல்லை என்று நினைக்கிறேன்; யாரும், அப்படி ஒரு நிலை இன்று நிலவுகிறதெனக் கொள்ள முடியாது,'' என்று, திரு—கொச்சி பி.-சோ. அரசாங்க நிதி மந்திரி பி. எஸ். நடராஜ பிள்ளை பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர் கே. பி. மாதவன் நாயர், சில நாளைக்கு முன்பு, 'பி.—சோ. அரசாங்கம், காங்கிரசின் ஆலோசனைகளை கேட்பதில்லை,' என்று கூறி வெளியிட்டிருந்த அறிக்கைக்கு மறுப்புத் தரும் வகையில், நிதி மந்திரி மேலும் குறிப்பிட்டதாவது:—

''காங்கிரஸ் கட்சிக்கும், பி.-சோ. கட்சிக்கும் பொதுவான கருத்துக்கள் நிறைய இருந்ததினால் தான், சிறுபான்மைக் கட்சியான பி.-சோ. கட்சிக்கு காங்கிரஸ் ஆதரவு தந்தது. கம்யூனிஸ்டுகளுடன் பொதுவான விஷயங்களில் தி.மு.கழகத்திலும் மான கருத்து ஒற்றுமை இல்லாமற் போனதும், காங்கிரஸ் கட்சி, பி.-சோ. கட்சியினரை ஆதரிக்க வேண்டிய நிலைக்கு மற்றொரு காரணமாகும்.

'பி.-சோ. அரசாங்கம், காங்கிரசை கலந்தாலோசிப்பதில்லை,' என்பது தவறு; வேண்டுமானால், எல்லாப் பிரச்சினைகளிலும் அரசாங்கம் காங்கிரசைக் கலந்தாலோசிக்காதிருக்கலாம்; நிலச் சீர்திருத்தம் போன்ற பிரச்சினைகளில் காங்கிரசைக் கலந்தாலோசிக்காமல் இல்லை.

'இந்த நிலப் பிரச்சினையில் பலருடைய கருத்தையும் அறிந்து கொள்ள முயன்றிருக்கிறோம்; அவை சட்டசபையின் அடுத்த கூட்டத்திலும் கொண்டுவரப்படும்; மேலும் இப்பிரச்சினை, ஆய்வுக் குழு ஒன்றின் முடிவுக்கும் விடப்படக்கூடும்.'

மந்திரிசபை விஸ்தரிப்புப் பற்றி தனக்கு எவ்வித தகவலும் இல்லை என்று தெரிவித்தார்.

# சி. பி. சிற்றரசு

★

தோழர் சிற்றரசு, 15-ந் தேதியிலிருந்து அன்றுடம் ஊசி போட்டுக் கொண்டும், நான்கு மணி நேரத்திற்கொருமுறை மருந்தும், இரவில் எண்ணெயும் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றார். இப்படி ஒரு திங்கள் செய்ய வேண்டுமென டாக்டர்கள் பணித்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் அவரால் எதையும் எழுத முடியவில்லை; ஆகவே, அவர் திரும்புகிற வரையில், 'தீச்சுடரை' தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது என்பதை அன்பர்களைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

—நிர்வாகி: 'தீச்சுடர்'

# மலேயா பூர்வீகக் குடிகளுக்குபணிபுரிந்த பிரிட்டிஷ் பெண்மணி!

'பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி ஆளாகிற நாடு ஒன்றில் வசியும் ஆதிகால பழங்குடி மக்கள் சிலருடன் பத்துவாரங்கள் தங்கியிருந்து அந்த சமூதாயம் அழிந்துபடாது பணி புரிந்து விட்டு திரும்பியிருக்கிறார் பிரிட்டிஷ் 'நர்ஸ்' ஒருவர்.

மிஸ் மார்காட் கிறிஸ்தென் யங் என்ற 26 வயதுடைய அந்தப் பெண்மணி ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

அவர், அந்தப் பழங்குடி மக்களின் வியாதிகளைப் போக்க அரும் பாடுபட்டிருக்கிறார்.

அந்த 'நர்ஸ்' தனது செஞ்சிலுவை உடைகளை, மலாய் நாட்டினர் அணியும் உடைகளுக்கு மாற்றுக் கொடுத்து உதவினாராம். மேலும், தானே, காட்டிலே பாயும் சிற்றோடைகளில் துணிகளை சலவை செய்யவும், நிலங்களை உழுவதில் அந்த பூர்வீகக் குடிகளுடன் சேர்ந்து பணியாற்றவும் செய்தாராம்.

மலாய அரசாங்கம் அந்தப் பூர்வீகக் குடிகள் பற்றி மிகவும் கவலைப்படுகிறதாம். அவர்களில் 50 பேர்களே உயிர் வாழ்கின்றனராம்.

யெங் என்ற அந்த 'நர்ஸ்' அந்தப் பூர்வீகக் குடிகளுடன் சேர்ந்து வாழ தாமே முன்வந்தாராம். அந்தப் பழங்குடி மக்கள் பார்த்த முதல் வெள்ளைக்காரர் இந்த 'நர்ஸ்' தானும்.

ஒரு மண் குடிசையில், பூர்வீகக் குடிகளின் தலைவர், அவரது மூன்று மனைவிமார்கள், குழந்தைகளுடன் அந்த அம்மையார் வசித்தார்களாம்.

மழை காலத்தில் கூரை ஒழுகுகிறது என்பதைத் தவிர மற்றப்படி எல்லா வகையிலும் குடிசை வாழ்க்கை சவுகரியமாக இருந்ததாகவே அந்த அம்மையார் குறிப்பிட்டார்.

# இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

## சென்னை சர்க்காரின் புதிய தொழில்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று கோரி சென்னை, மைசூர், ஐதராபாத், ராஜஸ்தான் ஆகிய நான்கு இராஜ்யங்கள் மட்டுமே இதுவரை தங்கள் திட்டத்தை மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனர் என்று தெரிகிறது. திட்டக் கமிஷனின் சுற்றறிக்கை ஒன்றுக்கு மேற்கண்ட நான்கு மாநிலங்களின் சர்க்கார்கள் பதில் அனுப்பியுள்ளனவாம்.

சென்னை சர்க்கார் அனுப்பியுள்ள பிரேரணைகளில், நெய்வேலி நிலக்கரித் தொழில், இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள், சேலத்தை அடுத்த சேர்வராயன் மலையில் கிடைக்கும் அலுமினிய உலோகத்தைப் பயன்படுத்தும் தொழில், பாபநாசத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பது, மேட்டூரில் டி. டி. டி. தொழிற்சாலை ஒன்று அமைப்பது, தூத்துக்குடியில் 'சோடா ஆஷ்' என்னும் இரசாயனப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இச்செய்தியை இந்திய சர்க்காரின் திட்ட இலாகா உதவி அமைச்சர் எஸ். என். மிஸ்ரா பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

மைசூர் சர்க்கார் தற்போதுள்ள இரும்புத் தொழிற்சாலைகளை விஸ்தரிப்பது, சோப்பு, மற்றும் மின்சார தொழிற்சாலைகளின் அபிவிருத்தி போன்றவைகளையும்; புதிதாக கச்சா பிலிம் உற்பத்தி, பழங்கள் பாதுகாப்பு தொழிற்சாலை, மாங்கனீஸ் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை ஆகியவைகள் பற்றிய பிரேரணைகளையும் அனுப்பியுள்ளதாம்.

# டல்லஸ் எழுப்பும் போர்க் குரல்!

## பார்மோசாவைக் காப்பாற்றியே தீருவாராம்!

''பார்மோசா தீவைக் கைப்பற்ற சீனக் கம்யூனிஸ்டுகள் முற்பட்டால், அமெரிக்காவுடன் போர் நடவடிக்கைகள் மூண்டுவிடும்,'' என்று அமெரிக்க இராஜாங்க மந்திரி டல்லஸ் கூறியிருக்கிறார்.

பார்மோசாவைக் கைப்பற்ற வேண்டுமென்று சீனக் கம்யூனிஸ்டுகள் முற்பட்டால், உலகத்திற்குக் கேடுகாலம் ஏற்படலாமென அவர் அஞ்சுகிறாராம்.

டல்லஸ் மேலும் கூறியதாவது:— ''பார்மோசா தீவை, ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுவதற்கு மட்டுந்தான் அமெரிக்கக் கப்பற் படை அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. டாசேன் எனும் தீவு, பார்மோசாவிலும், பார்மோசாவுக்கு ஆபத்து ஏற்படுகின்ற அளவுக்கு அத்தீவு தாக்கப்பட்டால், அமெரிக்கக் கடற்படைகள் அதில் குறுக்கிடும்.''

# 310 காலன் இரத்தம் தானம் செய்தவர்!

## விஞ்ஞானிகளுக்கு ஒரு 'புதிராக' உள்ளதாம்!

ஜெர்மனியைச் சேர்ந்த ஹெர்வால்டர் லெஸ்கி என்ற 48 வயதுடைய தொழிலாளி ஒருவர் கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து இரத்த தானம் செய்து வந்திருக்கிறார். இதுவரை அவர் 1410 லிட்டர், அதாவது சுமார் 310 காலன் இரத்தம் தானம் செய்துள்ளார். அந்த இரத்தம் பிரிட்டிஷ், அமெரிக்க யுத்தக் கைதிகள் 2,824 பேர்களுக்குச் செலுத்தப்பட்டதாம்.

இப்படி அசாதாரணமான அளவில் லாஸ்கியின் உடம்பில் எப்படி இரத்தம் ஊறுகிறது என்று கண்டுபிடிக்க டாக்டர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். என்றாலும், இன்னும் முடிவு எதும் காணப்படவில்லை என்று தெரிகிறது.

## ரேடியோ கதிரியக்க மழை

ரேடியோ கதிர் இயக்க சக்தியை பெருவாரியாகக் கொண்ட ரேடியோ கதிர்மழை டோக்கியோவில் சமீபத்தில் பெய்துள்ளதாம்.

டோக்கியோவிலுள்ள அணுசக்திக் குழுவின் டைரக்டர் காரியாலயத்தில், ஜப்பானிய, அமெரிக்க விஞ்ஞானிகள், ரேடியோ கதிர்கள் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கையிலேயே அந்த மழை பெய்திருக்கிறது. அம்மழையை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள், அதில் ரேடியோ கதிர் இயக்கம் மிகுந்த அளவுக்குக் காணப்பட்டதாகக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

# தாக்கப்பட்டார்

புதுவை, நவ. 16—

ஒழுகரை 'கொம்யூன்' நகராட்சி மன்ற உறுப்பினரும், சோஷலிஸ்டு கட்சி உறுப்பினருமான பலவர்த்சாமி மம்பராணே, யாரோ சிலர் கத்தி, கற்களால் பலமாகத் தாக்கியிருக்கின்றனர். புதுச்சேரி சர்க்கார் மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுவரையிலும் இச்சம்பவத்தையொட்டி போலீசார் 4 பேரைக் கைது செய்திருக்கின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ